# பாவமன்னிப்பு பெற்றிருக்கிறீர்களா?

**R. F. பெக்கர்**

***"எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்" – ரோமர் 4:7***

நண்பரே, காலம் குறுகியதாக இருப்பதால் இன்று உங்களுக்கு எழுதுகிறேன். கிருபையின் நாட்கள் வேகமாகக் கடந்து போகின்றன. மகா நியாயத்தீர்ப்பின் நாள் ஒவ்வொரு மணி நேரமும் நெருங்குகிறது. வாழ்க்கை என்னும் நாடா மெதுவாக, ஆனால் நிச்சயமாக சுருட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. நம் ஒவ்வொருவரின் நேரம் என்னும் மணல் கடிகாரம் சீக்கிரம் நின்று போகும். நீங்களும் நானும் நினைப்பதை விட காலத்தின் வழியாக அதிவேகமாகக் கடந்து, நித்தியத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். இன்னும் சில நாட்கள்தான்; அவை பறந்து போய்விடும். நம் ஒவ்வொருவருடைய ஆத்துமாவும் என்றென்றைக்குமாக அதற்கேயுரிய பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ சென்றுவிடும். ஆகவே, இன்று நான் உங்களை உண்மையுடனும் நல்ல நோக்கத்துடனும் சந்தித்து, ஒரேயொரு கேள்வியை மட்டும் கேட்கிறேன்: "நீங்கள் மன்னிக்கப்பட்ட ஆத்துமாவா?"

மேலேயுள்ள வேதவார்த்தைகள் மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய மிகப் பெரிய ஆசீர்வாதத்தைக் கூறுகின்றன. அது, நம்முடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டிருப்பதை அறிந்திருப்பதே. இந்த மன்னிப்பை மனப்பூர்வமாக உணர்வதுதான் உண்மையான மகிழ்ச்சிக்கு ஒரே அடித்தளமாக இருக்கிறது. ஆனால், நம்மில் பெரும்பாலானவர்களைப் போல, இந்த பாவமன்னிப்பைப் பெறாமல் வெளியில் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருப்பது போலத் தோற்றமளிப்பது, சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்துக்

கொண்டிருக்கும் ஒருவர் தன் மரண தண்டனையின் நேரம் நெருங்குவதை சற்றும் உணராமல், எந்தக் கவலையும் இல்லாமல் பாடிக் கொண்டிருப்பதைப் போன்றது.

இந்த வேதவசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் பாவமன்னிப்பை எவ்வளவு விலை கொடுத்தாலும் உங்களால் வாங்க முடியாது. உங்களுக்கு மிகவும் பிடித்த உறவினரால் ஒருபோதும் அதை உங்களுக்குக் கொடுக்க முடியாது. உங்கள் பாவங்கள் மிகக் குறைவாகவும், நீங்கள் செய்யும் நல்ல காரியங்கள் மிக அதிகமாகவும் இருக்கலாம்; ஆனால், இந்த ஆசீர்வாதத்தை நீங்கள் செய்யும் நல்ல காரியங்களால் ஒருபோதும் சம்பாதித்துக் கொள்ள முடியாது. ஒரு மனிதனோ அல்லது ஆசாரியனோ உங்கள் பாவங்களுக்காக மன்னிப்பைப் பெற்றுத் தரமுடியாது. இருப்பினும், இந்த பாவமன்னிப்பு இவ்வுலக பணமதிப்பைப் பொறுத்தவரை விலையில்லாமல் கிடைக்கும் ஒன்று. இந்த பரலோக பொக்கிஷத்தினால் கிடைக்கும் சந்தோஷத்துடன் ஒப்பிட்டால் இவ்வுலகத்தின் ஒட்டுமொத்த சந்தோஷங்களும் ஒன்றுமில்லாமல் போய்விடும். ஏனெனில், இந்த பாவமன்னிப்பு தேவன் அருளும் பரிசு. நண்பரே, நீங்கள் இந்த பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறீர்களா?

ஒருவேளை இப்போது நீங்கள் இப்படி நினைக்கலாம்: “நீங்கள் சொல்கிற அளவுக்கு நான் பாவமன்னிப்பைப் பெற வேண்டிய அவசியம் என்ன? பாவங்கள் மன்னிக்கப்படும் அளவிற்கு நான் யாரை காயப்படுத்தியிருக்கிறேன், யாரை ஏமாற்றியிருக்கிறேன், யாருக்குத் தீமை செய்திருக்கிறேன், அல்லது யாரை வஞ்சித்திருக்கிறேன்?” இந்த இடத்தில்தான் அநேகர் தவறு செய்கிறார்கள். எனவே, நண்பரே, கவனமாக இருங்கள்! மனிதர்கள் நம்மை மன்னிப்பதைப் பற்றி நான் எழுதிக் கொண்டிருக்கவில்லை. தேவனுடைய பார்வையில் நீங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறீர்களா? “மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்” (1 சாமுவேல் 16:7).

அதிகமாக இதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று உணர்வதால், தெளிவாக எழுதுகிறேன். பாவமன்னிப்பைப் பெறாமல் இருப்பது பயங்கரமானது. நாம் உயிருள்ளவர்கள் வாழும் இந்தப் பூமியை விட்டுச் சென்ற பின்னர் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. மரணத்திற்குப் பின்னர் உங்கள் ஆத்துமாவில் எந்த மாற்றமும்

உண்டாகாது. கல்லறைக்கு அப்பால் எவ்வித மாற்றமும் நிகழாது. நாம் கடைசி மூச்சை விட்ட பின்னர் நமக்கு புதிய இதயம் கொடுக்கப்பட முடியாது. தனிமையும் அமைதியுமான மரண நேரத்தை நாம் கடந்து சென்ற பின்னர் காலம் என்ற ஒன்று இருக்காது. நாம் எப்படி மரிக்கிறோமோ அதே விதமாக என்றென்றைக்குமாக இருக்கப் போகிறோம். மரமானது எந்த நிலையில் கீழே விழுகிறதோ அப்படியே கிடக்கும். அதுபோல, நாமும் இப்போது இந்த உலகத்தில் மன்னிக்கப்பட்டவர்களாக அல்லது மன்னிப்பற்ற ஆத்துமாவாக இருக்கலாம். அதன்படியே நாம் என்றென்றைக்கும் மன்னிக்கப்பட்டவர்களாக அல்லது மன்னிப்பற்ற ஆத்துமாவாக இருப்போம். பாவங்களை மன்னிக்க கிறிஸ்துவுக்கு பூமியில் மட்டுமே அதிகாரம் உண்டு (மாற்கு 2:10).

நண்பரே, இப்போது நீங்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், இயற்கையாகவே உங்கள் பாவத்தை உணராமல் இருக்கிறீர்கள் என்று அர்த்தம்; கிறிஸ்து மட்டுமே உங்களுக்கு அதை உணர்த்த முடியும் (எபேசியர் 5:14). இயற்கையாகவே உங்களுக்கு இருக்கும் மாபெரும் தேவையையும், நம்பிக்கையற்ற நிலைமையையும் நீங்கள் பார்க்காதபடி சாத்தான் உங்கள் கண்களைக் குருடாக்கியிருக்கிறான் (2 கொரிந்தியர் 4:4). நீங்கள் இன்னும் அந்த அழகான, அகலமான பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றாலும், அந்தப் பாதை உங்களை அழிவுக்கு நேராக நடத்தும் அழிவுப் பாதையாக இருக்கிறது (மத்தேயு 7:13). ஒருவேளை உங்கள் நண்பர்களும் உங்களுடன் இருப்பவர்களும் நீங்கள் எல்லாவற்றிலும் சரியானவராக இருப்பதாக நினைக்கலாம், ஆனால் உங்கள் பாதையின் முடிவில் நித்திய மரணம் காத்திருக்கிறது (நீதிமொழிகள் 16:25). நீங்கள் ஒருபோதும் தேவனிடம் மனந்திரும்பவில்லை என்றாலோ, அல்லது இயேசு கிறிஸ்துவின் மீது தனிப்பட்ட விதத்தில் விசுவாசம் வைக்கவில்லை என்றாலோ, நீங்கள் இழந்து போனதும், மன்னிக்கப்படாததுமான ஆத்துமாவாக இருக்கிறீர்கள் (அப்போஸ்தலர் 20:21).

இது நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான சத்தியம். இதைவிட முக்கியமான கருத்து எதுவும் உங்கள் மனதை ஆக்கிரமிக்க முடியாது. இதை விட மேலானதாக நீங்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம் ஒன்றுமிருக்காது. ஆகவே, நீங்கள் பெற்றுக்

கொள்வீர்கள் என்று நம்பும் எதையும் விட மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் உங்களுக்கு அவசியமாவது ஏன் என்பதை தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தும் மூன்று உண்மைகளை உங்களுக்குச் சொல்கிறேன். நான் இவற்றைத் தெரியப்படுத்தும்போது தேவனுடைய ஆவியானவர் உங்களை வழிநடத்துவாராக. அவர் உங்கள் மனதைத் திறந்து, நீங்கள் கிறிஸ்துவின் நிமித்தம் தேவன் மன்னித்திருக்கும் ஒரு ஆத்துமாவாக இருப்பதன் நித்திய மதிப்பை அறிந்து உணர்ந்து கொள்ள உதவுவாராக.

## 1. தேவன் பரிசுத்தமானவர்

நாம் அனைவரும் சந்திக்கவிருக்கும் தேவன் பரிசுத்தமானவர் என்பதால், நமக்கு பாவமன்னிப்பு அவசியம். ஏசாயா தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றியிருக்கும் சேராபீன்கள் தேவனுடைய மகத்துவமான பிரசன்னத்தில் அவருடைய பரிசுத்தத்தின் செறிவை வெளிப்படுத்த முடியாதது போல, “சேனைகளின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்” (ஏசாயா 6:3) என்று போற்றுவதைக் கேட்டார். யோபு, “இதோ, தம்முடைய பரிசுத்தவான்களையும் அவர் நம்புகிறதில்லை; வானங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல. கேளும், அவர் தம்முடைய பணிவிடைக்காரரிடத்தில் நம்பிக்கை வைப்பதில்லை; தம்முடைய தூதரின்மேலும் புத்தியீனத்தைச் சுமத்துகிறாரே” என்றார் (யோபு 15:15; 4:18).

தேவன் சகல ஞானமும், சர்வவல்லமையும் உடையவர். அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலும் இல்லை (யாக்கோபு 1:17). அவர் மாறாதவர் (எபிரேயர் 13:8). அவர் ஒருவரே சாவாமையுள்ளவர். அவர் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறார்; மனிதரில் ஒருவரும் அவரைக் கண்டதில்லை; அவரைக் காணவும் முடியாது (1 தீமோத்தேயு 6:16). நாம் உறவு கொண்டிருக்க வேண்டிய இதே தேவன், “நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், … உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக” என்கிறார் (11:44). ஆவியானவரும், “உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல…” (1 பேதுரு 1:15) என்று சொல்கிறார்.

இத்தகைய பரிசுத்தமான தேவனுக்கே நாம் நம்மையும் நம் வாழ்க்கையையும் பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரேயர் 9:27; ரோமர் 14:12). நம்முடைய ஒவ்வொரு இரகசிய பாவத்தையும் அறிந்த அவர் அதைக் கடந்த காலத்தில் நடந்து முடிந்த ஒன்றாக மாற்ற நினைக்கிறார் (பிரசங்கி 3:15). அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய பாவமன்னிப்பின் செய்தியையும் நாம் எப்படி எடுத்துக் கொண்டோம் என்பதைப் பற்றி கடைசி நாளில் அவருக்குத்தான் நாம் பதில் சொல்ல வேண்டும். அந்த பயங்கரமான நாளில், நம் வாழ்க்கை முழுவதற்குமாக அவர் நம்மிடம் உரிமை கோருவதை நாம் நிராகரித்ததற்காக வஞ்சிக்கப்பட்டதும் அவிசுவாசம் கொண்டதுமான நம்முடைய இருதயத்தின் உண்மை நிலையை அவரிடம் அறிக்கையிட வேண்டியதிருக்கும்.

சர்வவல்லவரும் பரிசுத்தருமான இந்த தேவன், ஒருநாள் ஒவ்வொரு பாவியும் இந்த உலகத்தில் தம் குமாரனைப் பற்றி கொண்டிருந்த மனப்பான்மையின்படி நீதியாக நம்மை நியாயந்தீர்ப்பார். இரட்சிப்பை இழந்து போன ஒவ்வொரு ஆத்துமாவும் இந்த உலகத்தில் வாழும் காலத்தில் தேவனிடம் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், இல்லையென்றால் என்றென்றைக்குமாக அழிந்து போக வேண்டும். இதுவே பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாம் நபரின் ஆணை. "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" என்பது லூக்கா 13:3 -ல் உள்ள அவரது புனிதமான வார்த்தை. ஓ, நண்பரே, அந்தக் கடைசிச் சந்திப்பில், ஒரு மன்னிக்கப்பட்ட ஆத்துமாவாக இருக்க வேண்டியதன் பயங்கரமான முக்கியத்துவத்தைக் காணும் ஞானத்தைக் கர்த்தர் உங்களுக்குத் தருவாராக.

## 2. நாம் பாவிகள்

வாழ்நாள் முழுவதும் பாவத்தில் இருக்கும் நாம் இந்தப் பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக பாவிகளாக இருப்பதால், நமக்கு பாவமன்னிப்பு அவசியம். உங்களுடன் இருப்பவர்களுக்கு விரோதமாகச் செய்த பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. மற்றவர்களிடம் மறைத்து வைத்திருக்கும் இரகசிய

பாவங்களைப் பற்றி அந்தந்த ஆத்துமாவுக்குத்தான் தெரியும். உங்களைப் பற்றி உங்கள் நண்பர்களும், அண்டைவீட்டாரும், உறவினரும் என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், என்றென்றும் இருப்பவரும், மனிதன் பார்க்கிற விதமாகப் பார்க்காதவரும், உங்கள் இருதயம் மற்றும் மனதின் எண்ணங்களையும் நோக்கங்களையும் அறிந்தவருமாகிய பரிசுத்த திரித்துவ தேவனுக்கு முன்பாக நீங்கள் அவிசுவாசம் என்னும் பாவத்தினால் ஏழைகளும், நிர்ப்பந்தமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குருடர்களும், நம்பிக்கையற்றவர்களுமாக இருக்கிறீர்கள். கிருபையினால் மட்டுமே நீங்கள் மன்னிக்கப்பட்ட ஆத்துமாவாக மாற முடியும்.

அவிசுவாசமும், மனந்திரும்பாமையும் நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமிடமிருந்து நமக்குச் சொத்தாகக் கிடைத்தவை. அவன் பிசாசை விசுவாசித்து, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனான். நாம் பாவத்தில் பிறந்தோம்; ஆனால் மனிதனின் பெருமை அதை அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. நாம் பிறந்ததே பாவத்தில்தான் என்பதால், நம்முடைய இருதயங்கள் இயல்பாகவே முற்றிலும் வஞ்சிக்கப்பட்டவையாக இருக்கின்றன; நம்முடைய மனங்கள் இரட்சிப்பை இழந்து போன நம் நிலைமையைக் குறித்து தேவனுடைய வார்த்தை சொல்வதை விசுவாசிக்க மறுக்கின்றன. அதாவது, எல்லாவற்றையும் விட திருக்கும் கேடும் வஞ்சகமும் நிறைந்ததுமான நம் இருதயம் சொல்வதையே நாம் விசுவாசிக்கிறோம் (எரேமியா 17:9). ஆனால், ஜீவனுள்ள தேவனுடைய பிழையற்ற வார்த்தை அவருடைய ஆணையைக் குறித்து மிகத் தெளிவாகச் சொல்கிறது: “ஒரு பாவமும் செய்யாமல், நன்மையையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை” (பிரசங்கி 7:20). ஆவியானவரின் வார்த்தையினால் நமக்கு நாமே உயர்த்திக் கொண்டிருந்த நம்முடைய சுயநீதி என்றென்றைக்குமாக தூசியாக மாறிப்போனது: “நீதிமான் ஒருவனாகிலும் இல்லை” – “எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானோம்” (ரோமர் 3:10, 23).

## 3. நாம் சீக்கிரத்தில் மரணத்தைச் சந்திப்போம்

நாம் சீக்கிரமாக, ஆம், மிக மிகச் சீக்கிரமாக மரிக்கவிருக்கிறோம் என்பதால் நாம் தேவனிடமிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வது

அவசியம். நாம் இந்தப் பூமியில் சில காலம் பயணம் செய்து நித்தியத்தை நோக்கிச் செல்லும் பயணிகளைப் போல இருக்கிறோம். நமக்கு நன்றாக அறிமுகமானவர்கள் மரித்துப் போவதைப் பார்க்கும்போது நாம் இங்கு சில காலம் மட்டுமே வாழ்வோம் என்பது அனுதினமும் நமக்கு நினைவூட்டப்படுகிறது. நாம் எல்லோருமே தாவீதுடன் இணைந்து, "மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது" (1 சாமுவேல் 20:3) என்று சொல்ல முடியும்.

மிக நீண்ட உலக வாழ்க்கையும் சீக்கிரத்தில் முடிந்து போகத்தான் போகிறது. பலவான்களும், பலவீனர்களும் மரித்து அடக்கம் பண்ணப்படுவதைக் காண்கிறோம். நம்முடைய கண்களுக்கு முன்பாக இளைஞர்களும் வயோதிபர்களும், பணக்காரர்களும் ஏழைகளும், படித்தவர்களும் பெரியவர்களும், பிரபலமானவர்களும் சக்திவாய்ந்தவர்களும், அறியாதவர்களும் ஒழுக்கமற்றவர்களும் என எல்லோருமே தங்கள் கல்லறையில் இறங்கத்தான் செய்கிறார்கள். பாவம், அவிசுவாசம் என்னும் வாதைகள் ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் இருக்கின்றன; அவை நிறைவடையும்போது மரணத்தைக் கொண்டுவருகின்றன (யாக்கோபு 1:15). ஆம், நண்பரே, நீங்கள் யோசித்துப் பார்க்க விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இப்போதே உங்கள் சரீரத்தில் அந்த மரண தண்டனை இருக்கிறது (2 கொரிந்தியர் 1:9). மனிதர்களின் சரீரத்தை அழிக்கவல்லவனான அவலட்சணமானவன் யாருடைய வாசலில் காத்திருக்கிறான் என்று நம்மில் யாரால் சொல்ல முடியும்?

தேவனுடைய பரிசுத்தம், மனிதனின் பாவத்தன்மை மற்றும் மரணத்தின் நிச்சயம் என்ற இம்மூன்று உண்மைகளின் அடிப்படையில், உங்கள் மீதான உண்மையான பாசத்துடன், "நீங்கள் பாவமன்னிப்பைப் பெற்ற ஆத்துமாவாக இருக்கிறீர்களா?" என்று கேட்கிறேன்.

நான் எழுதிய இந்த உண்மைகள் நம்புவதற்கோ, ஏற்றுக்கொள்ளவோ கடினமானவையா? இப்போதே அவைகளை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லையென்றால், என்றென்றைக்கும் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாமல் போய்விட வாய்ப்புண்டு. இந்த உலகத்தில், இப்போது பாவமன்னிப்புப் பெறாமலும், மனந்திரும்பாமலும் இருப்பது மிகக் கொடுமையான ஒன்று; அதேசமயம்,

நீங்கள் எந்த தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறீர்களோ அவருக்கு முன்பாக கடைசி நியாயத்தீர்ப்பில் உங்களுக்கென்று ஒரு இரட்சகர் இல்லாமல் நிற்பது மனிதர்களால் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பயங்கரமானதாக இருக்கும். "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற[து]" (எபிரேயர் 9:27).

நீங்கள் பாவமன்னிப்பைப் பெற்ற ஆத்துமா என்பதை அறிய விரும்புகிறீர்களா? தேவனோடு சமாதானமாக இருக்க விரும்புகிறீர்களா? மிக உயர்ந்த அதிகாரத்தின் கீழ் உங்கள் பாவங்கள் உங்களுடைய நிர்ப்பந்தமான மனதிலிருந்து என்றென்றைக்குமாக நீக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறீர்களா? தேவனுடைய சொந்த வார்த்தைகள் கொடுக்கும் உறுதியினால் உங்களுடைய பாவப்பட்ட ஆத்துமா காக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறீர்களா? விரும்புகிறீர்கள் என்றால், உங்களுக்கு பாவமன்னிப்பு என்னும் ஆசீர்வாதத்தைப் பற்றிய சில விஷயங்களைச் சொல்கிறேன். இந்த ஆசீர்வாதம் இல்லையென்றால், நிச்சயம் நீங்கள் என்றென்றைக்குமாக அழிந்து போக நேரிடும் (1 யோவான் 5:12).

இந்தக் கைப்பிரதியின் தலைப்புப் பகுதியில் எழுதப்பட்டிருக்கும் வேதவசனத்திலிருந்து மன்னிக்கப்பட்ட ஆத்துமாவாக மாற ஒரேயொரு வழி மட்டுமே இருப்பதை அறியலாம். நாம் யாருக்கு விரோதமாக பாவம் செய்தோமோ **அவரால்** மட்டுமே மன்னிக்கப்பட முடியும். "தேவனிடத்தில் மனந்திரும்பி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால்" (அப். 20:21) மட்டுமே நாம் பாவமன்னிப்பு பெற்ற ஆத்துமாக்களாக மாற முடியும். "இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்று" பவுல் கூறினார் (அப். 13:38). "இவர்" என்பவர் வேறு யாருமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. அவருக்கு விரோதமாகவே நாம் பாவம் செய்திருக்கிறோம். பாவமன்னிப்பு பெற்றுக் கொள்வதற்காக அவரிடம் மட்டுமே எப்போதும் செல்ல வேண்டும். உள்ளம் உடைந்து, மனந்திரும்பி, இந்த உலகத்திலேயே நம் பாவங்களை அறிக்கையிட்டு அவரை அணுக வேண்டும், இல்லையென்றால் என்றென்றும் மன்னிக்கப்படாமல் இருக்க வேண்டியதாகிப் போகும். அவரையல்லாமல் வேறு யாரும் உங்களுடைய உதவியற்ற ஆத்துமாவை காப்பாற்ற முடியாது. ஒருமுறை பேதுரு,

“ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” என்று சொன்னார் (யோவான் 6:68). மற்றுமொரு முறை அவர், “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப்.4:12) என்றார்.

அநேகர், உங்கள் இரட்சிப்பை நீங்களே சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையில் உங்களை நல்ல காரியங்களைச் செய்யும்படியும், மிகுந்த உண்மையுள்ளவர்களாக இருக்கும்படியும் சொல்லலாம். வேறு சிலர் உங்களை ஊழியக்காரர்களிடம் அனுப்பி வைக்கலாம், ஆனால் அவர்களாலும் உங்களை இரட்சிக்க முடியாது. அவர்கள் இரட்சிப்புக்கு வழியாக இருப்பவரிடம் உங்களை வழிநடத்த மட்டுமே முடியும். ஆனால், அவர்களுக்குள்ளும் சில ஊழியக்காரர்கள் தாங்களே பாவமன்னிப்புப் பெறாதவர்களாக இருப்பதால், கள்ளப் போதகர்களாக இருக்கிறார்கள்; அவர்களுடைய அறிவுரையெல்லாம் பொய். குருடனுக்கு குருடன் வழிகாட்டுவதைப் போன்று அவர்கள் அழிவுக்கேதுவான நித்தியத்திற்குக் கடந்து போவார்கள்; அவர்களால் வஞ்சிக்கப்பட்ட சபை மக்களும் அவர்களைத் தொடர்ந்து அங்கு போவார்கள். அப்படிப்பட்டவர்களை நம்புவது, முடிவில் தவறிப் போகக் கூடிய பரிகாரத்தைச் சொல்லும் ஒருவனைச் சார்ந்து கொள்வதைப் போன்றது. ஆனால் இவர்கள் அதிகமாக நம்பிக்கைக் கொடுப்பது போல நடித்தாலும், ஆத்துமாக்களுக்கு உண்மையான நம்பிக்கையைக் கொடுக்கவே முடியாது. அவர்களும் பொய்யான கற்பனைகளையும், இரகசியமான உபதேசங்களையும், நல்ல காரியங்களையும், கிறிஸ்துவின் சத்தியத்தை நேசிக்காதவர்கள் செய்யும் சடங்குகளையும், பாவப்பரிகாரமாக சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தையும், தம்மை நம்புகிறவர்களை இரட்சிக்கும் அந்த ஒரே பலியையும் அவமதிக்கிறவர்களையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள்.

சிலர் பாவமன்னிப்புக்காக உங்களை ரோமன் கத்தோலிக்க பாதிரியாரிடம் அனுப்பி வைக்கலாம். ஆனால், சாத்தானுடையதான பொய்யான பாபிலோனிய அந்நிய சடங்குகளைக் கைக்கொள்கிறவராகிய அவரும் இந்தப் பரிதாபமான பாவியின் மீது சுமப்பதற்கு அரிய பல பாரங்களைச் சுமத்தி, இறுதியில் நித்திய

வாழ்க்கைக்கான வாக்குறுதியையே கொடுக்காமல் போகிறார். மேலும் அவர் உங்களை ஆலய பூசைகளில் கலந்து கொள்ளவும், பாவ அறிக்கை செய்யவும், பரிகாரம் செய்யவும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவம், ஜெபமாலை, மற்றும் வானராக்கினி போன்ற பாபிலோனிய விக்கிரகங்களை வணங்கவும் சொல்வார். புனிதர்களையும், பொருட்களையும் வணங்கவும், மரியாளையும் ஃபாத்திமாவையும் தொழுதுகொள்ளவும் வைப்பார். தோள் அங்கிகளையும், அணிகலன்களையும், மணிகளையும் அணிந்து கொள்ளச் செய்வார். ரோமப் பேராலயங்களுக்கு புனிதப் பயணம் மேற்கொள்ளச் செய்வார்; கணக்கற்ற ஜெபங்களை மீண்டும் மீண்டும் சொல்லவும், புரியாத மூடநம்பிக்கைகளை பின்பற்றவும், வியக்க வைக்கும் சடங்குகளையும் நியமங்களையும் கைக்கொள்ளவும் செய்வார். அவர் தனக்கே புரியாத அந்நிய சடங்குகளால் உங்களை ஆவிக்குரிய அறியாமைக்குள் கட்டி வைத்து விடுவார்; அதேசமயம் உங்கள் பணத்தையும் அபகரித்துக் கொள்வார். இறுதியில், அந்த ரோமப் பாதிரியார் செய்ய முடிவதெல்லாம் நம்பிக்கையற்ற உங்கள் ஆத்துமாவுக்கு நிலையான சமாதானத்தை ஒருபோதும் கொடுக்காத அந்நிய தொழுகைகளை உணர்ச்சிவசப்பட்டு செய்யும் நிலைக்கு உங்களைக் கொண்டு வருவதுதான் என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

ஆனால், அன்பான நண்பரே, நான் உங்களுக்கு ஆறுதலான ஒரு வார்த்தைச் சொல்லட்டும்: "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. ... மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1 தீமோ.2:5,6). இந்தத் தருணத்தில், உங்கள் நல்ல காரியங்களோ, மந்திரம் அல்லது மனிதனின் உதவியோ வீண். உடைந்த உள்ளத்துடன் மனந்திரும்பி, கிறிஸ்துவின் இரத்தம் உங்களுக்காக சிந்தப்பட்டது என்ற விசுவாசத்துடன் நீங்கள் கிறிஸ்துவிடம் வருவீர்கள் என்றால் நித்தியமான பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வீர்கள்;

உங்கள் உள்ளான மனதில், "எனக்கு பாவமன்னிப்பு தேவை என்று அறிந்திருக்கிறேன்; நான் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்று அறிவேன்; ஆனால் அவருடைய பார்வையில் நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிவது எப்படி?" என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா?

தேவனுடைய வார்த்தையில், மதியீனமானவன் கூட இதில் தவறு செய்ய முடியாத அளவிற்கு ஆவியானவர் இரட்சிப்பின் வழியைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (ஏசாயா 35:8). அநேகர் இந்த இரட்சிப்பிற்குள் வர நாடித் தேடியும் வர முடியாமல் போகும், ஏனென்றால், ஐயகோ! – அவர்கள் காலம் கடந்து தேடியிருப்பார்கள் (லூக்கா 13:24). “கர்த்தாவே, கர்த்தாவே” என்று வாழ்நாள் முழுவதும் சொல்லிக் கொண்டிருந்த அநேகரும் கூட பரலோகத்திற்குச் செல்ல முடியாமல் போகும் (மத். 7:21). ஆம், நண்பரே, இரட்சிப்பைத் **தொழிலாகச்** செய்வதற்கும், **பாவமன்னிப்பு பெற்ற ஆத்துமாவாக** இருப்பதற்கும் இடையில் மிகப்பெரிய மற்றும் விளங்கிக் கொள்ள முடியாத வித்தியாசம் உண்டு. அநேகர், ஓ அநேகர் இரட்சிப்பைத் தொழிலாகத்தான் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெயருக்குத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே தவிர உண்மையில் செத்திருக்கிறார்கள் (வெளி. 3:1). வெகுசிலரே பாவமன்னிப்பு பெற்ற ஆத்துமாவாக இருக்கிறார்கள், ஏனெனில் வெகுசிலர் மட்டுமே தங்களுக்குப் பாவமன்னிப்பு தேவை என்பதையும், பாவமன்னிப்பைப் பெறவில்லை என்றால் தாங்கள் நித்தியமாக அழிந்து போக வேண்டும் என்பதையும் அறிந்து உணர்ந்திருக்கிறார்கள். வெகுசிலர் மட்டுமே தேவனுடைய பாவமன்னிப்புக்கான வழியைக் கண்டுகொள்கிறார்கள். வெகுசிலரே அந்த வழியில் நடக்கிறார்கள். அதைவிட வெகுசிலரே எப்போதும் அவ்வழியில் நிலைத்திருக்கிறார்கள். அதைவிட வெகுசிலரே தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு ஊழியம் செய்து, கிறிஸ்து செய்த பாவப்பரிகாரத்தின் மூலம் தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதை நிரூபிக்கிறார்கள்.

கிறிஸ்து என்பவரில்தான் நீங்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். அவர் பாவிகளைச் சுத்திகரிக்க ஜீவத்தண்ணீருள்ள ஒரு ஊற்றைத் திறந்திருக்கிறார் (யோவான் 4:14). நம்முடைய ஆவிக்குரிய நிர்வாணத்தை மூடுவதற்கு நீதியின் உடையைக் கொடுத்திருக்கிறார் (லூக்கா 15). நாம் புசித்து, என்றென்றைக்கும் வாழ்வதற்கான ஜீவ அப்பம் அவரே (யோவான் 6). அவரே மனந்திரும்பிய ஆத்துமாவை பரலோகத்திற்கு வழிநடத்தும் வெளிச்சமாயிருக்கிறார் (யோவான் 8:12). பஸ்கா ஆட்டுக்குட்டியானவராகிய அவருடைய இரத்தமே நம்மை அழிக்க வருகிறவனுடைய கையைத் தடுத்து நிறுத்தும் (யாத்.12:13). பாவத்தை

என்றென்றுமாக எடுத்துப் போடக்கூடிய ஒரே பலியை செலுத்திய அந்த ஒருவரிடமே நான் உங்களை வழிநடத்துவேன் (எபி. 9:26, 28).

அவருடைய வார்த்தையின் மீதான விசுவாசத்தினால், எவ்வித தயக்கமும் இன்றி மனந்திரும்பிய உங்களுடைய ஆத்துமாவை கிறிஸ்துவிடம் ஒப்படைத்து, அவர் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பதுதான் இரட்சிப்பு. வெகுகாலத்திற்கு முன்னரே தேவ ஆவியானவர், “அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்” (யாத். 12:13) என்று கூறியிருக்கிறார். நீங்கள் சீக்கிரத்தில் சந்திக்கவிருக்கும் பரிசுத்தமான தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறீர்கள்; உங்களுடைய பாதுகாப்புக்காக நீங்கள் இயேசுவின் இரத்தத்தை மட்டும் நம்பியிருக்கிறதை அவர் காணும்போது, உங்களைக் கடந்து போவார். உங்களுக்கு விரோதமாக எந்தக் குற்றச்சாட்டையும் வைக்கமாட்டார், ஏனெனில் உங்களுக்குப் பதிலாக கிறிஸ்து மரித்திருக்கிறார். அவர் இரத்தம் சிந்தி கிரயம் செலுத்தியதற்கு மேல் உங்களிடமிருந்து மீண்டும் ஒருமுறை தேவன் கிரயம் கேட்க மாட்டார். “அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்” (அப்.10:43). வாசகரே, நீங்கள் பாவமன்னிப்புப் பெற்ற ஆத்துமாவா?

இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சொந்த இரத்தத்தை கிரயமாகச் செலுத்தி, நமக்காக பாவமன்னிப்பை வாங்கிக் கொடுத்திருக்கிறார். அவர் சிலுவையில் மரித்ததினால், தேவனுக்கு நம்மால் ஒருபோதும் செலுத்த முடியாத கடனைச் செலுத்தியிருக்கிறார். அவர் தம் உயிர்த்தெழுதலினால், சிலுவையில் ஒரே முறையாகச் செலுத்திய கிரயத்தின் மூலம் தேவன் திருப்தி அடைந்திருக்கிறார் என்பதையும், மனந்திரும்பி தம்மீது நம்பிக்கை வைக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் விடுதலை அடைகிறது என்பதையும் நிரூபித்திருக்கிறார்.

தேவனுடைய பாவமன்னிப்பை உங்களுடையதாக்கிக் கொள்ள, நீங்கள் கிறிஸ்துவின் வார்த்தையை விசுவாசிப்பதன் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வேண்டும் (யோவான் 1:12). கிறிஸ்து இப்போது பரலோகத்தில் இருப்பதால், உங்களால் அவரைப் பார்க்க முடியாது. நீங்கள் இப்போது இருக்கிற விதமாக அவரிடம் போகவும் முடியாது. ஆனால், அவர் தம் வார்த்தையில் ஒரு வாக்குத்தத்தத்தை வைத்துப்

போயிருக்கிறார்: "என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" (ஏசாயா 45:22). "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10) என அவர் தாம் சொன்னதைச் செய்திருப்பதால் அவர் மீது உங்கள் நம்பிக்கையை வைக்கலாம். கல்வாரிச் சிலுவையில் உங்களுக்குப் பதிலாக தம் குமாரனாகிய இயேசு கொல்லப்பட்டார், மற்றும் அவருடைய இரத்தம் உங்கள் பாவங்களுக்கு என்றென்றைக்குமாக பரிகாரம் செய்திருக்கிறது என்ற தேவனுடைய வார்த்தையை நன்றியுடனும் தாழ்மையுடனும் நம்பலாம்.

இவ்வாறு எவ்வித தயக்கமுமின்றி கிறிஸ்துவை நம்புவதுதான் இரட்சிப்பு. இதுவே கிருபையினால் இரட்சிக்கப்படுதல். இதுவே கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக மாறுதல். இதுவே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல். இவ்வாறு, கடந்து போன அனைத்திற்காகவும், இப்போது நடக்கிற அனைத்திற்காகவும், இனி வரப்போகும் அனைத்திற்காகவும் கிறிஸ்துவை உங்கள் ஆத்துமாவில் நம்புவதன் மூலம்தான் மன்னிக்கப்பட்ட ஆத்துமா ஆகிறீர்கள். இதைச் செய்வதால் நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள் என்பது தெளிவாகும்.

வாசகரே, இப்போது உங்கள் காரியத்தை அவருடைய அன்பான கரங்களில் ஒப்புவிப்பீர்களா? அவர் உங்களுக்குப் பதிலாக தேவனுடைய சாபமாகி, உங்களை என்றென்றைக்குமாக விடுவிக்கும்படி மரித்தார் என்பதை இப்போது சந்தோஷமாக நம்புவீர்களா? இப்போதே நீங்கள் விசுவாசத்தில் அவரிடம் வந்து, அவருக்குள் இளைப்பாறி, அவரை நம்பி, அவரைப் பற்றிக் கொண்டு, மற்ற எல்லா நம்பிக்கைகளையும் விட்டுவிடுவீர்களா? அப்போது நீங்கள் நம் முற்பிதாவாகிய தாவீதுடன் சேர்ந்து சந்தோஷமாக, "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்" (சங். 32:1) என்று சொல்லலாம். – ***R.F. பெக்கர்***